**சுருக்கம்**

பேரூராட்சிகள் – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டத்தின் மூலம் பில்லூர் குடிநீர் மேம்பாடு திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சியை சுற்றியுள்ள 16 பேரூராட்சிகளுக்கு பில்லூர் நீர் ஆதாரத்தைக் கொண்டு குடிநீர் வழங்க திருத்திய மதிப்பீடு ரூ.8146.76 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை**

அரசாணை (ப). எண். **24** நாள்: **19/01/2010**

**6, தை, திருவள்ளுவர் ஆண்டு 2041**

படிக்கப்பட்டது:

1. அரசாணை (ப) எண்.118, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 25.3.2009
2. பேரூராட்சிகளின் இயக்குநரின் கடித எண். 15779/2008/பி 3 நாள் 24/3/2009 மற்றும் 18.12.2009

.......

ஆணை:-

இரண்டாவதாகப் படிக்கப்பட்ட 24.3.2009–ம் நாளிட்ட கடிதத்தில், பேரூராட்சிகளின் இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டத்தின் மூலம் பில்லூர் குடிநீர் மேம்பாடு திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சியை சுற்றியுள்ள கீழே குறிப்பிட்டுள்ள 16 பேரூராட்சிகளுக்கு குடிநீர் வழங்க தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு ரூ.5882.36 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி கோரியிருந்தார்:-

| வ. எண் | பேரூராட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | எண்.4 வீரபாண்டி | 233.42 |
| 2. | பெரியநாயக்கன்பாளையம் | 358.03 |
| 3. | நரசிம்மநாயக்கன்பாளையம் | 270.41 |
| 4. | துடியலூர் | 398.82 |
| 5. | வெள்ளக்கிணறு | 157.03 |
| 6. | இடிகரை | 143.86 |
| 7 | சரவணம்பட்டி | 472.18 |
| 8 | சின்னவேடம்பட்டி | 284.87 |
| 9 | காளப்பட்டி | 367.64 |
| 10 | வெள்ளலூர் | 524.31 |
| 11 | மதுக்கரை | 858.93 |
| 12 | எட்டிமடை | 253.65 |
| 13 | இருகூர் | 302.13 |
| 14 | பள்ளபாளையம் | 249.96 |
| 15 | கண்ணம்பாளையம் | 301.23 |
| 16 | சூலூர் | 705.89 |
| மொத்தம் | | 5882.36 |

இத்திட்டத்திற்கு பேரூராட்சிகள் செலுத்த வேண்டிய 30% பங்கிற்கு தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை மேம்பாட்டு கழக **(TUFIDCO)** தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரிடம் கடன் பெற்றுக்கொள்ள சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளின் மன்றங்களில் தீர்மானங்கள் இயற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்ததின் அடிப்படையில் முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மாநில மற்றும் மத்திய அரசின் பங்கின் முதல் தவணையாக ரூ.**1029.41** இலட்சம் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

**2.** தனது **18.12.2009–**ம் நாளிட்ட கடிதத்தில் பேரூராட்சிகளின் இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.**8146.76** இலட்சம் என திருத்தி அமைக்கப்பட்டுள்ளது என்றும் திருத்திய மதிப்பீட்டிற்கு சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளின் மன்றங்களில் தீர்மானங்கள் இயற்றப்பட்டுள்ளதாகவும் கோயம்புத்தூர் மாநகராட்சியை சுற்றியுள்ள கீழ்க்குறிப்பிட்டுள்ள **16** பேரூராட்சிகளுக்கு பில்லூர் நீர் ஆதாரத்தைக் கொண்டு குடிநீர் மேம்பாடு திட்டத்தினை செயல்படுத்த திருத்திய திட்ட மதிப்பீடு ரூ.**8146.76** இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்குமாறு அரசினை கோரியிருந்தார்:-

| வ. எண் | பேரூராட்சியின் பெயர் | திருத்தியதிட்டமதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | எண்.4 வீரபாண்டி | 333.11 |
| 2. | பெரியநாயக்கன்பாளையம் | 513.25 |
| 3. | நரசிம்மநாயக்கன்பாளையம் | 374.66 |
| 4. | துடியலூர் | 561.23 |
| 5. | வெள்ளக்கிணறு | 222.91 |
| 6. | இடிகரை | 195.36 |
| 7 | சரவணம்பட்டி | 654.24 |
| 8 | சின்னவேடம்பட்டி | 390.29 |
| 9 | காளப்பட்டி | 529.78 |
| 10 | வெள்ளலூர் | 703.85 |
| 11 | மதுக்கரை | 1152.81 |
| 12 | எட்டிமடை | 339.42 |
| 13 | இருகூர் | 428.22 |
| 14 | பள்ளபாளையம் | 343.68 |
| 15 | கண்ணம்பாளையம் | 414.82 |
| 16 | சூலூர் | 989.13 |
| | **மொத்தம்** | **8146.76** |

கோவை மாநகராட்சியை சுற்றியுள்ள **16** பேரூராட்சிகளுக்கு பில்லூர் நீர் ஆதாரத்தைக் கொண்டு குடிநீர் அபிவிருத்தி செய்ய ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டத்தின் மூலம் **2008–2009**ஆம் ஆண்டின் விலை நிர்ணயப் பட்டியலின்படி ரூ.**5882.36** இலட்சங்களுக்குப் பதிலாக திருத்திய மதிப்பீட்டுத் தொகையாக ரூ.**8146.76** இலட்சம் என கணக்கிட்டு கூடுதல் தொகைக்கு பின்வரும் காரணங்களை தெரிவித்துள்ளார்.-

அ) மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட பிரேரணையில் திட்டத்திற்காக 2008–2009ன் விலை நிர்ணயப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டோடு இதரச்செலவுகள் 2½ சதவீதமும், எதிர்பாராச் செலவுகள் 2½ சதவீதமும், மேற்பார்வைச் செலவுகள் 13 சதவீதமும் மற்றும் திட்டம் 2010–2011ல் நிறைவுறும் என்ற கணக்கில் ஆண்டொன்றுக்கு 5 சதவீதம் விலை உயர்வு என்ற அடிப்படையில் இரண்டு ஆண்டிற்கு விலை உயர்வுத் தொகையும் மற்றும் திட்ட ஆய்வுப் பணிகளுக்கான செலவு 1.5 சதவீதம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கணக்கிடப்பட்டுள்ளதாகவும், தற்போது பயன்பாட்டிலுள்ள பில்லூர் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தில் கோவை மாநகராட்சியும் ஒரு பயனாளியாகும் என்றும், கோவை மாநகராட்சிக்குத் தனியாக பில்லூர் குடிநீர் திட்டத்தின் மூலம் மாநகராட்சியின் முழு தேவையையும் வழங்கப்பட உள்ளதால் ஏற்கனவே கூட்டுக் குடிநீர் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள குடிநீர் அளவு உபரியாக உள்ளதை மாற்றி பேரூராட்சிகளுக்கு வழங்கப்பட உள்ளது என்றும், திட்டச்செலவில் மாநகராட்சிக்கு வழங்க வேண்டிய பங்குத்தொகையில் சம்பந்தப்பட்ட 16 பேரூராட்சிகளும் வழங்க வேண்டிய பங்குத் தொகையான ரூ.639.41 இலட்சங்களும் திருத்திய மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகையில் 2008–2009 விலை நிர்ணயப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுடன் இதர செலவு 3 சதவீதம் மற்றும் நிர்வாகச் செலவு 0.5 சதவீதம் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் மற்ற காரணிகளை மத்திய அரசு அனுமதிக்கவில்லை என்றும் தெரிவித்து மத்திய அரசின் வழிகாட்டுதல் மற்றும் ஒப்பளிப்புக் குழுவிற்கு வைக்கப்பட்ட மதிப்பீட்டினை இணைத்து அனுப்பியிருந்தார்.

ஆ) மூல மதிப்பீடும் திருத்திய மதிப்பீடும் 2008–2009–ம் ஆண்டுக்கான கட்டண விகிதத்தில் (Schedule of rates) தயாரிக்கப்பட்டன என்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் நடைமுறையில் உள்ள மேற் குறிப்பிட்ட காரணிகளை கூட்டுவதால் மதிப்பீடு உயர்வதாகவும் தெரிவித்துள்ளார்.

இ) இந்த திட்டப் பணியை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொள்வதால், திட்ட மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி அளித்தால் மட்டுமே பணிகள் மேற்கொள்ள இயலும் என்பதால் திருத்திய மதிப்பீட்டுத் தொகை அவசியமாகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், பேரூராட்சிகளின் இயக்குநர். இத்திட்டத்தின் திருத்திய திட்ட மதிப்பீட்டிற்கு மேற்குறிப்பிட்ட பேரூராட்சிகள் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

4. இந்நிலையில், பேரூராட்சிகளின் இயக்குநரது செயற்குறிப்பில் தெரிவித்துள்ள மேற்குறிப்பிட்டுள்ள காரணங்களை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனடிப்படையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டத்தின் மூலம் பில்லூர் நீர் ஆதாரத்தைக் கொண்டு கோயம்புத்தூர் மாநகராட்சியை சுற்றியுள்ள பத்தி 2–ல் குறிப்பிடப்பட்டுள்ள 16 பேரூராட்சிகளுக்கு திருத்திய மதிப்பீடு ரூ.8146.76 இலட்சத்தில் குடிநீர் வழங்குவதற்கான திட்டத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது. இந்த அனுமதி ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டில் 30 சதவிகிதத்துடன், முந்தைய திட்ட மதிப்பீடு மற்றும் திருத்திய திட்ட மதிப்பீட்டிற்கிடையேயான வித்தியாசத் தொகையையும் பேரூராட்சிகளே ஏற்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் பின்வருமாறு அமையும்:-

| விபரம் | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| திருத்திய திட்ட மதிப்பீடு | 8146.76 |
| ஒப்பளிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு | 5882.36 |
| மத்திய அரசின் பங்கு (50%) (ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டில் 50%) | 2941.18 |
| மாநில அரசின் பங்கு (20%) (ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டில் 20%) | 1176.47 |
| உள்ளாட்சிகளின் பங்கு (30%) (ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டில் 30%) | 1764.71 |
| திட்ட மதிப்பீடு மற்றும் திருத்திய மதிப்பீட்டிற்கிடையேயான வித்தியாசத் தொகை (8146.76 – 5882.36) | 2264.40 |
| பேரூராட்சிகள் ஏற்க வேண்டிய செலவினம் | 4029.11 (1764.71 + 2264.40) |

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண். 3724/நி.செ/பி/2009,நாள் 29.12.09-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நிரஞ்சன் மார்டி,**
**அரசு செயலாளர்**

பெறுநர்
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–108
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம், சென்னை–5
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம், சென்னை–35
மாநில தலைமை கணக்காயர், சென்னை.18/35
மாநில தலைமை கணக்காயர், (தணிக்கை) சென்னை–18
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை–9
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை, சென்னை–108
<u>நகல்:-</u>
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
செயலரின் நேர்முக செயலர், நநிமகுவ துறை, சென்னை–9.
நிதி (ந.நி.(ம)கு.வ.) துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (வரவு–செலவு/அந.2) துறை, சென்னை–9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.